நிலையமாக இருக்கிறது. ஏற்கெனவே, 30 படுக்கைகள் கொண்ட, தாம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்படுவதற்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, கல்லக்குடி என்கிற அந்தப் பேரூராட்சிக்குத் துணை சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தத் துணை சுகாதார நிலையம் அங்கு கட்டடம் இல்லாமல் செயல்பட்டு வந்தால், அதற்குக் கட்டடம் இந்த ஆண்டேகூட கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

108—

நல வாரியம்

***31270—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர் நல வாரியம் அமைக்கப்பட்டு, 20-7-2000 முதல் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 27]

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்த நாடே போற்றும் அளவில் தொழிலாளர்களின் துயர் துடைத்திட பல்வேறு நலத் திட்டங்களை, ஏழையெளிய தொழிலாளர்களுக்கு வாரி வழங்கி வருகிறார்கள். தமிழகத்தில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேலான ஆட்டோ தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கிடையில் ஆட்டோ ஓட்டி வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களுக்கு வேலைக்கேற்ற வருமானமோ, பணிப் பாதுகாப்போ கிடையாது. 90 சதவீத ஓட்டுநர்கள், தினமும் 100 ரூபாய்க்கு ஆட்டோக்களை வாடகைக்கு எடுத்து ஓட்டி வருகிறார்கள். பெட்ரோல் மற்றும் உதிரிப் பொருட்களின் விலை உயர்ந்து வருவதாலும், போதிய சவாரிகள் கிடைக்காததாலும், போதிய அளவு வருமானம் கிடைக்காமல் தங்களது குடும்பத்தை நல்ல முறையில் பராமரிக்க முடியாமல் துயருற்று வருகிறார்கள். மற்ற வாகன ஓட்டுநர்களைவிட அதிகமான பல இன்னல்களுக்கு ஆளாகித் தவித்து வரும் ஆட்டோ தொழிலாளர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க அவர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, வாரியம் செயல்படுகிறது என்று சொல்கிறார் அமைச்சர். (குறுக்கீடு) வாரியம் செயல்படுகிறது என்று சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் நல வாரியம் என்று 2000-ஆவது ஆண்டிலேயே தொடங்கப்பட்டு அவர்களுக்கு உரிய நலப் பணிகள் எல்லாம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அதிலே 38,534 பேர் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நலத் திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நல வாரியம் அமைக்கப்பட்ட அதே நேரத்தில், 2000-2001 ஆம் வருடத்திலே அமைக்கப்பட்ட மற்ற நல வாரியங்களில் எந்தெந்த நல வாரியங்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன? செயல்படாமல்

இருக்கிற நல வாரியங்களைச் செயல்பட வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், இது மூலக் கேள்வியோடு கொஞ்சம்கூடத் தொடர்பே இல்லாதது.

வினா எண் *109*, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

109—

விலை நிர்ணயம்

***18610—திரு இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-25

திரு. இரா. இராம் பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் அரசு விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா என்பது என்னுடைய கேள்வி. என்னுடைய பகுதியிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக, பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் அதிக அளவிலே மிளகாய், பஞ்சு விளைச்சல் இருக்கின்றது. இப்போதுள்ள நிலையில், மழை இல்லாத காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் மிகவும் வறண்டு காணப்படுகிறார்கள். மிகவும் குறைந்த அளவிலே அவர்கள் விளைச்சலை ஏற்படுத்தியிருக்கக்கூடிய அந்த மிளகாய்க்கும், பஞ்சுக்கும்